[1995 மே 5

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994–95 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 63 முதல் 67 வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

அதோடு என்னை இந்தக் குழுவிற்குத் தலைவராகப் போட்டதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைக் காணிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள், அறிமுகம் செய்தல், 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

1995 மே 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995ஆம் ஆண்டு மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு மாநகர சிறுவழக்கு நீதிமன்றங்கள் மற்றும் மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.